道义居民联系网
TOH YI RESIDENTS' NETWORK
c/o 4 Toh Yi Drive #01-217 Singapore 590004 Tel: 6468 3502

7 செப்டம்பர் 2020

அன்பார்ந்த டோ யீ குடியிருப்பாளர்களே,

**டோ யீ குடியிருப்பாளர்களுக்கு இல்ல மேம்பாட்டுத் திட்டம் (ஹெச்ஐபி)**

நான், டோ யீ பேட்டையின் சார்பில், ஹாலந்து - புக்கிட் பாஞ்சாங் நகர மன்றத்தின் வாயிலாக, ஹெச்ஐபி திட்டத்திற்கு விண்ணப்பம் செய்திருப்பதாக ஜனவரி 8, 2020 தேதியிட்ட என் கடிதத்தில் உங்களிடம் தெரியப்படுத்தி இருந்தேன். அந்த விண்ணப்பம் தேசிய வளர்ச்சி அமைச்சு மற்றும் வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்தின் (வீவக) அங்கீகாரத்திற்காகக் காத்திருந்தது. இப்போது, ஹெச்ஐபி திட்டப்பணிகளின் அடுத்த கட்டத்திற்கு டோ யீ பேட்டை தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை உங்களிடம் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அதோடு, உயர்தரமான பொருத்துமானங்களோடும் ஆக்கப்பணிகளோடும் டோ யீ பேட்டை பயனடையும். மேலும், வெளியில் துணி உலர்த்த புதுவகையான அடுக்கு பொருத்தப்படும்.




*இழுக்கக்கூடிய துணி உலர்த்தும் அடுக்கில், துணிகளை உலர்த்தும்போது கம்புகளை விரிசலாக்கலாம் (இடது), துணிகளைக் காயவைக்கும்போது அல்லது எடுக்கும்போது கம்புகளை உள்ளிழுக்கலாம் (வலது)*

2 ஹெச்ஐபி திட்டத்தின் ஒரு பகுதியாக, வீவக வீடுகளை முதியோருக்கு உகந்ததாக்கும் சுறுசுறுப்பான மூத்தோருக்கான மேம்பாட்டுத் திட்டமும் (ஈஸ் திட்டம்) வழங்கப்படும். சிங்கப்பூரர்களின் வீடுகளில் ஈஸ் திட்டத்தை அமலாக்க பெருமளவு மானியம் கிடைக்கும்.

3 அடுத்தக்கட்ட நடவடிக்கையாக, ஹெச்ஐபி பணிகளை அமலாக்குவதற்கு வடிவமைத்துக் கட்டும் குத்தகையாளர் குழுவைப் பணியமர்த்த வீவக ஏற்பாடு செய்யும். இதன் தொடர்பில் நாங்கள் வீவக-வுடன் அணுக்கமாகச் செயல்படுவோம். கூடிய விரைவில் மேல்விவரங்களை நீங்கள் எதிர்பார்க்கலாம்.

4 உங்களுக்கு வீவக தொடர்பான கேள்விகள் ஏதேனும் இருந்தால், வீவக கிளமென்டி கிளையுடன் 1800-2255432 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் அல்லது bcladmin@mailbox.hdb.gov.sg முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

5 இந்த ஹெச்ஐபி மேம்பாட்டுடன் டோ யீ-யில் உள்ள நமது வீடுகள் புதுப்பொலிவு பெற்று, அன்றாட வாழ்க்கை மேலும் வசதிமிக்கதாகும் என நான் நம்புகிறேன். உங்கள் ஆதரவு, புரிந்துணர்வு, பொறுமை அனைத்திற்கும் எனது நன்றி.

உங்கள் உளமார்ந்த



திருவாட்டி சிம் ஆன்
புக்கிட் தீமா அடித்தள அமைப்புகளின் அடித்தள ஆலோசகர்